★ தனி இதழ் 1 அணு ★ இலங்கையில் 10 சதம் ★ PHONE:

நம் நாடு

தி. மு. க. தின இதழ் ஆசிரியர் இரா. நெடுஞ்செழியன்

The "Nam Nadu" A Tamil Daily. ★ The official organ of the D.P.F.

மலர் 3] சென்னை: வைகாசி 8உ திங்கள் (21—5—56) ★ ★ வெளியீடு: வைகாசி 9உ திங்கள் (22—5—56) [இதழ் 290

'டில்லி! இந்திய நாகரிகத்தைப் பிரதிபலிப்பதாகாது!'

வினேபாபாவேயின் வருத்தம்

சென்னை, மே 20—

'இந்தியாவின் அரசியல் தலைநகரமான டில்லியில், சாராயம் தண்ணீரைப் போல் வழங்கப்படுகிறது' என்று ஆச்சாரியா வினோபாபாவே குறிப்பிட்டுள்ளார்.

(4-ம் பக்கம் பார்க்க)

பொதுத் தேர்தலில் போட்டியிட தி. மு. கழகம் முடிவு

வரலாறு காணாத வாக்கெடுப்பு முறை

திராவிட மக்களின் நெடுநாளைய கோரிக்கை நிறைவேறுகிறது

முடிவு கண்டு ஆளும் வர்க்கம் குலைநடுக்கம்?

(முகவை ஆர். எஸ். பாண்டியன்—நமது தனி நிருபர்)

வள்ளுவர் நகர், மே 21—

தென்னாட்டு மக்களின் நீண்ட நாளையப் பேரவாவினைப் பூர்த்தி செய்கிறது தி. மு. கழகம். அவர்கள் உரிமையோடு எழுப்பிய கேள்விக்கு விடையளித்திருக்கிறது, கழகம்.

'ஏணியாகப் பணி புரிகிறார்கள்; எவரெவரையோ மேலேற்றிவிடுகிறார்கள்; அவர்களோ, மக்களுக்குத் தந்த வாக்குறுதிகளைக் காற்றில் பறக்கவிட்டு, ஏமாற்றுக்காரர்களாய்—எத்தர்களாய்—பதவிப் பித்தர்களாய் மாறிவிடுகிறார்கள்; ஏன் இந்த அவல நிலை? என்ன இல்லை இந்தக் கழகத்தவருக்கு? என்ன கேட்டு நாங்கள் தர மறுத்துவிட்டோம்? கொள்கைகளை இயன்ற அளவேனும் ஏற்றுக்கொள்ள மறுத்தோமா? இலட்சியத்தின் புனிதத்தன்மை எடுத்துரைக்கப்பட்டபோது, சந்தேகித்தோமா? அந்த இலட்சிய ஈடேற்றத்திற்காகப் போராட்டங்கள் நடத்தியபோது, எங்களின் இதயபூர்வமான ஆதரவினை நல்கவில்லையா? போராட்டங்களினால் ஏற்பட்ட கஷ்ட நஷ்டங்களைச் சமாளிக்கவும், கழகத்தின் நடவடிக்கைகளுக்காகும் செலவுகளைச் சரிகட்டவும் நிதி தேவை என்று கேட்டபோது, 'வெள்ளித் தோட்டா'க்களாகவே இல்லாவிடினும், 'செப்புத் தோட்டா'க்களாகவேனும்—எங்கள் சக்திக்கேற்பத் தந்து கடமையாற்றத் தவறியதுண்டா?

'எங்களுக்கு அறிவையும் கொளுத்தி, அந்த வெளிச்சத்தில் எங்களைச் சூழ நிற்கும் பிரச்சினைகளை நிறுத்தி அவற்றிற்கான பரிகாரங்களை விளக்கி, அந்தப் பரிகாரங்களை நடத்திவைக்கக் கழகத்தின் மூல இலட்சியங்கள் ஈடேற வேண்டிய அவசியத்தை எடுத்துக்காட்டி, அந்த இலட்சிய ஈடேற்றத்தில்தான் எங்கள் நல்வாழ்வு புதைந்து கிடக்கிறது என்பதையும் நாங்கள் உணரச் செய்து, அந்த நல்வாழ்வு எப்போது என்ற ஏக்கத்தையும் ஆவலையும் ஊட்டி, வாழ்வைப் பற்றிய அவநம்பிக்கையைக் கைவிடச் செய்து, முழு விடுதலையோடு கூடிய புதிய பூரண நல்வாழ்வு நிச்சயம் பெறுவோம் என்ற நம்பிக்கையையும் பிறக்கச் செய்துவிட்டு, ஏன் அந்த வாழ்வு எங்களுக்கு விரைவிலேயே கிடைக்க வழி செய்யாது காலந்தாழ்த்துகின்றனர், இந்தத் தி. மு. கழகத்தவர்.

'இலட்சியமற்றோர், கொள்கையில் பற்றற்றோர், வாக்குறுதிகளின் புனிதத் தன்மையை உணராதோர், எத்தர்—ஏமாற்றுக்காரர்—சாதி வெறியர்—இன்னபிறர்களின் பின்னாலே ஓடிக்கொண்டிருப்பானேன்? இவர்களே ஏன், தேர்தல்களில் ஈடுபட்டு நாட்டை மீட்க—நல்லாட்சி நிலவ—அதனால் எங்களுக்கு நல்வாழ்வு கிடைக்க வழிசெய்யலாகாது?'—என்று நமது, தி. மு. கழகத்தை நோக்கி தென்னக மக்கள் எழுப்பிய நியாயமான—ஆசையின் விளைவான கேள்விகளுக்கு, கழகம் மகிழ்ச்சிக்குரிய பதிலைத் தந்திருக்கிறது.

ஆம்; சட்டசபை, மக்கள்சபை ஆகிய ஆட்சி மன்றங்களுக்கான பொதுத் தேர்தலில் தி. மு. கழகம் போட்டியிடுவது என்ற வரலாற்றிற்குப் பெருமை தருவதும், புதுமையானதுமான—இதுவரை கண்டறியாத முடிவினை கழக மாநில மாநாடு நிறைவேற்றியுள்ளது.

மக்களுக்கு மகிழ்ச்சியும், மதோன்மத்தர்களாய் விளங்கும் ஆளும் கட்சியினர்—அவர்களின் நிழலில் நின்று ஒளிவிட நினைக்கும் பிற்போக்காளர்கள்—அவர்களோடு பரிபூரணமாக ஐக்கியமாகிவிட முடிவெடுத்துவிட்ட 'முற்போக்காளர்'கள் முதலியோருக்கு மருட்சியும் தருகிற பொதுத் தேர்தல் பற்றிய கழக முடிவு தெளிவாக்கப்பட்டுவிட்டது. எவரெவர், பொதுத் தேர்தலில் நமது கழக நிலையை அறிந்துகொள்ளத் துடித்து நின்றனரோ அவரெல்லாம் அறியும் வண்ணம், முடிவு பகிரங்கமாக்கப்பட்டுவிட்டது.

இந்த முடிவினை, தி. மு. கழகம் மேற்கொண்ட முறை இதுவரை இந்தியத் துணைக்கண்டத்தில், வேறெந்த அரசியல் கட்சியும் கையாள எண்ணவோ, துணியவோ இல்லாத முற்றிலும் புதிய—ஜனநாயக பூர்வமான முடிவாகும். இந்தியாவில் மட்டுமன்றி, உலகிலேயே எந்த ஒரு கட்சியும், தனது முடிவுகளை—பொதுத் தேர்தல் போன்ற முக்கியமான பிரச்சினைகளுக்கான முடிவுகளை, இதுபோன்ற விரிவான, உண்மையான ஜனநாயக அடிப்படையில் மேற்கொண்டிருக்குமா என்பதும் சந்தேகத்திற்குரியதே!

ஏற்கனவே அறிவிக்கப்பட்டிருந்தபடி இங்கு நடைபெற்று முடிவுற்றுள்ள தி. மு கழக 2-வது மாநில மாநாட்டின் இறுதி நாளான நேற்று காலை 8 மணி முதல் 4 மணி வரை, 'பொதுத் தேர்தலில் தி. மு. கழகம் போட்டியிட வேண்டுமா—வேண்டாமா' என்று, மாநாட்டிற்கு வந்திருந்தோரிடை ஒரு வாக்கெடுப்பு நடத்தப்பட்டது.

வேண்டுமென்போர்—சிவப்பு நிறப் பெட்டியிலும், வேண்டாமென்போர்—கறுப்பு நிறப் பெட்டியிலும் தங்கள் வாக்குகளை நிரப்புமாறு கோரப்பட்டனர்.

மாநாட்டின் இரண்டாம் நாளான மே 18-ந் தேதியன்று அடித்த சூறுவளியினாலும், பெய்த பெருமழையினாலும் வாக்கெடுப்பிற்கான ஏற்பாடுகளில் சில மாற்றங்கள் செய்யவேண்டி வந்தது.

இதன் விளைவாக, வாக்கெடுப்பு நாளன்று இலட்சக் கணக்கான மக்கள் கூடியிருந்தும், சுமார் 60 ஆயிரம் மக்களே வாக்கெடுப்பில் கலந்துகொள்ள இயன்றது.

வாக்கெடுப்பில் கலந்துகொண்ட அனைவரும், நீண்ட—நெடிய—தீவிரமான சிந்தனைக்குப் பிறகே வாக்குகளை அளித்தனர் என்பதை, வாக்களிக்குமுன்பும் பின்பும் அவர்கள், மேற்கொண்ட உரையாடல்களைக் கேட்டவர் உணர முடியும்.

பெட்டிகளில் நிரப்பப்பட்ட வாக்குகளைத் தோழர் ஈ. வெ. கி. சம்பத் தலைமையில் அமைக்கப்பட்ட ஒரு குழு எண்ணி முடிவுகளை வழங்கிற்று.

56,942, பேர் தி. மு. கழகம் பொதுத் தேர்தலில் போட்டியிட வேண்டும் என்றும், 4,203 பேர்

(4-ம் பக்கம் பார்க்க)

'உரிமை உண்டு—கட்டுப்படுத்தாதே!'

கெய்ரோ, மே 20—

"எவ்வளவு ஆயுதங்களாயினும், எவரிடமிருந்தாயினும் பெறுவதற்கு எகிப்துக்கு முழு உரிமை உண்டு! எகிப்தின் இந்தச் சுதந்திரத்தைக் கட்டுப்படுத்த எந்த வல்லரசுகள் முனைந்தாலும் அது எகிப்துக்கு பகைமை மூட்டும் செயலாகவே கருதப்படும்!"

என்று, எகிப்திய பிரதமர் நசார் அலெக்சாண்டிரியாவில் கூறியுள்ளார் எனத் தெரியவருகிறது.

தண்டவாளத்தைவிட்டு இரயில் இறங்கியது

ஏழுபேர் இறந்தனர்

ராஜ்கோட், மே 20—

'ஜாம்நகருக்கு அருகில் நடந்த இரயில்வே விபத்தில் மொத்தம் 7 பேர் உயிரிழந்தனர்; 23 பேருக்குப் படுகாயம் ஏற்பட்டுள்ளது என்று, சௌராஷ்டிர அரசாங்கமும், மேற்குப் பிராந்திய இரயில்வேயும் அறிவித்துள்ள செய்திபடி தெரிகிறது.

மாநில மாநாட்டின் நெஞ்சுருக்கும் காட்சி

பொதுச்செயலாளர் தலைமை ஏற்ற மாட்சி

மே 18, 19-ம் நாட்களின் நிகழ்ச்சி விவரம்

(முகவை ஆர். எஸ். பாண்டியன்—நமது தனி நிருபர்)

வள்ளுவர் நகர், மே 21—

எதிர்காலத்திய—பொதுவான உலக விடுதலை வரலாற்றிலும், குறிப்பாக இந்தியத் துணைக் கண்டத்தின் அரசியல் வரலாற்றிலும், அதனிலும் குறிப்பாக தென்னாட்டின் வரலாற்றிலும் சிறப்புமிக்கதோர் இடம்பெற வழிசெய்துவிட்ட முடிவினை மேற்கொண்ட திருச்சி வள்ளுவர் நகரில் கடந்த நான்கு நாட்களாகக் கூடிய தி. மு. கழக 2-வது மாநில மாநாட்டைப் படம் பிடித்துக்காட்டுவது—மாநாடு பற்றிய சொல்லோவியம் தீட்டுவது, அத்தனை சுலபமானதல்ல!

மாநாட்டில் கலந்துகொண்டு, மாநாட்டைச் சிறப்பித்ததோடன்றி, அரியகருத்து விருந்தும் பெற்ற மக்களின் எண்ணிக்கையோ இலட்சக்கணக்கில்! அவர்கள் உள்ளத்தில் பதிந்துவிட்ட மாநாட்டுக் காட்சிகள், அத்தனையையும் வெளியில் கொண்டுவருவதுசுலபமானதா?

தனித்தன்மையை அழித்து ஒழித்துவிட பன்னெடுங்காலமாக மேற்கொள்ளப்பட்டு வரும் 'பகீரத' முயற்சிகளுக்குப் பின்னும், இன வலிமை குன்றாத மக்கள் திராவிட மக்கள்—அசாதாரணமான—இயற்கையையும் மீறிய, வியப்புக்குரியதோர் உயிர்ச் சத்து, திராவிடத்திற்கு உண்டு—புகழ் மங்கினாலும், பொலிவு குன்றினாலும், படை எடுப்புகளைச் சந்தித்திருந்தாலும், பட்டுப்போகாத பண்பாடு திராவிடப் பண்பாடு—இழந்துவிட்ட வாழ்வை, குலைந்துவிட்ட பெருமையை பறிகொடுத்துவிட்ட உரிமையைத் திரும்பவும் பெறத் தேவையான தன்மான உணர்வு, தாயகப் பற்று, வீரம் தீரம் எல்லாம் பெற்றுவிட்டனர் திராவிடர்—என்பதற்கு, வள்ளுவர் நகரில் நடைபெற்ற மாநில மாநாடு ஒரு மகோன்னதமான எடுத்துக்காட்டாகும்—மிகத் தெளிவான சான்றாகும்!

அந்த பெருமைக்கு உரியதும் பெருமிதம் தருவதும், நமது சாதனைத் திறனை அளந்து காட்டுவதுமான மாநில மாநாட்டின் சிறப்பியல்புகளைத் தொடர்ந்து இங்கு தருவோம்.

நிகழ்ச்சிகள்:

மாநாட்டின் முதல் இரண்டு நாள் நிகழ்ச்சியும், மூன்றாம் நாள் முற்பகல் நிகழ்ச்சியும் ஏற்கனவே வெளிவந்துள்ளன.

மாநாட்டின் இரண்டாம் நாளான 18-ந் தேதியன்று மாலை நிகழ்ச்சிகள் 8-30 [illegible] துவங்கின.

தோழியர் . [illegible], தோழர் தென்காசி முத்துசாமி குழுவினர் இன்னிசை வழங்கினர்.

பின்னர், வரவேற்புக் குழுத் தலைவர் அன்பில் தர்மலிங்கம் அவர்கள், மாநாட்டிற்குத் தலைமை ஏற்று, நாட்டிற்கும் கழகத் தோழர்களுக்கும் வழிகாட்டும் மாநாட்டு பொதுச்செயலாளர் இரா. நெடுஞ்செழியன் அவர்களைக் கேட்டுக் கொண்டு, அவரது பெயரை முன்மொழிந்தார்.

அதனைத் தொடர்ந்து தோழர்கள் ஜி. பராங்குசம் (திருச்சி), கே. டி. எஸ். மணி ([illegible]), சாம்பசிவம் ([illegible]), இளம்பரிதி (சென்னை), [illegible] இளங்கோ (தஞ்சை), [illegible] (வ. ஆ), இராமலிங்கம் ([illegible]), எஸ். முத்து (மதுரை), [illegible] ஜான் (நாஞ்சில்), கே.வி.கே. [illegible] (நெல்லை), இல. ம. [illegible]டியன் (இராமநாதபுரம்), [illegible] சங்கரன் (பம்பாய்), [illegible] (பெங்களூர்) [illegible] தங்கள் மாவட்டங்களின் [illegible]தும், தோழர்கள் அ. [illegible] பகுதூர், தம்பித்துரை ([illegible])

(4-ம் பக்கம் பார்க்க)

நம் நாடு
தி.மு.க. தின இதழ் ஆசிரியர்: இரா. நெடுஞ்செழியன்
சென்னை 21—5—'56 திங்கள்

பூதானத் தலைவர் நிதானம் தவறுகிறார்!

பன்னெடுங் காலமாகவே, வந்த விருந்தினரை ஓம்புவதைத் தலைசிறந்த பண்பாகக் கொண்டிருந்ததனால், தமிழன் தன் மானமிழந்து, இன்று அடிமையிலும் அடிமையாய் வாழும் நிலைக்கு வந்துவிட்டான்.

தமிழகத்தில் அண்டிப் பிழைக்கவந்த மக்கள் சிலர் இந்த நாட்டு மொழியையும், கலையையும், பண்பையும் பாழாக்கித் தமிழரென்ற இனம் ஒன்றுண்டு என்பதே வரலாறு அறியாத செய்தியாகிவிட வேண்டுமென்று நெடுங்காலமாக முயற்சி செய்து வந்திருக்கின்றனர். இன்றும் அம்முயற்சி அவர்களைவிட்டு நீங்கியதாகத் தெரியவில்லை. இன்றளவும் தமிழைத் தாய்மொழியாகக்கொண்டு, அதைப் பேசி, அதனால் வயிறு வளர்க்கும் மக்கள் சிலர், தாய் மொழிச் சிறப்பைக் கருதாமல் சமஸ்கிருத ஆக்கத்துக்கான வழிகோலிக் கொண்டிருப்பதைக் காணலாம்.

தமிழ் என்றொரு தனிமொழி இருந்ததென்பதையே மறைத்துவிடப் பழங்கால முதலே முயற்சி செய்யப்பட்டு வந்திருக்கிறது. அதன் பலனாகவே தமிழ் சமஸ்கிருதத்தினின்று தோன்றியது என்று கூறும் துணிவும் சிலருக்கு எழுந்தது. ஆனால் தமிழர்கள் அவ்வெறியை அப்போதைக்கப்போது தணித்து வந்திருக்கின்றனர். எனினும், தமிழ்ப் பகைவர்கள் தமிழுக்கு உலை வைக்கும் நோக்கத்தை விட்டுவிடாமல், சமஸ்கிருதச் சொற்களைத் தமிழில் புகுத்தி மணிப்பிரவாள நடை ஒன்றினைத் தோற்றுவித்து, அந்நடையே சிறந்ததெனப் பரப்பி வந்தனர்; இலக்கியங்கள் எழுதினர்; உரை எழுதினர்; தமிழ் தனித்தியங்க முடியாத மொழி என்றனர்; தனித்தியங்க வேண்டுமென்பது குறுகிய மனப்பான்மை என்றனர்; ஆனால், தமிழருட் சிலரேனும் உறங்கிக்கிடக்கவில்லையாதலின், இச்சதி வேலைகள் தடுக்கப்பட்டன.

அண்மையில், மணிப்பிரவாள நடை தோற்றுவித்தவர்களை ஒத்த ஒரு சிலர், மறுமலர்ச்சி நடை என ஒன்றைப் பரப்பக் கட்டுப்பாடான முறையில் முயன்றனர்; நாம எப்படிப் பேசுகிறோமோ அப்படியே எழுதுவதுதான் சிறந்த நடை என்றனர்; அப்படியே எழுதியும் வந்தனர். ஆனால், விழிப்புணர்ச்சியுடைய தமிழர்கள் முயற்சியால், பேச்சுத் தமிழ் வீரர்கள் புறமுதுகிட்டனர். தமிழ் ஒருவாறு காப்பாற்றப்பட்டது.

தமிழ் நூல்களைப் பற்றியும் இதே போன்ற வேலைகள் பரிமேலழகன் காலத்திலிருந்தே நடைபெற்று வருகிறது. நூலாசிரியரின் கருத்தைப் புரட்டிக் கூறுதல், தம் சொந்தக் கருத்தை நூலாசிரியன் கருத்துப்போலக் கூறுதல் போன்ற வேலைகளைப் பரிமேலழகன், நச்சினார்க்கினியன் போன்ற உரையாசிரியர்கள் செய்துவந்தனர்.

மற்றும் சிலர், தமிழில் உள்ள சிறந்த நூல்களெல்லாம், வடமொழியினின்று தோன்றியவை எனக் கூறித்திரிந்து மகிழ்ந்தனர். ஸ்ரீவல்லபர் எனும் பெயரே வள்ளுவர் என்றுயிற்று என்று கூறும் அளவுக்குக்கூடச் சிலருக்குத் துணிவு பிறந்தது. ஆராய்ச்சியாளர் என்னும் பெயரால் சிலர் தங்கள் கருத்துக்கேற்றவாறு தங்கள் எண்ணம் நிறைவேற வேலை செய்தனர். இவ்வளவையும் சமாளித்துக் கொண்டு, தமிழரின் பண்பாட்டை அழியாமல் காக்கும் பொறுப்பை ஏற்றுப் பெருந்தொல்லைகளுக்கிடையே தி. மு. கழகம் உழைத்து வந்திருக்கின்றது. தமிழர் பண்பாட்டை அழிக்க நடக்கும் சதி முயற்சிகளைச் சாடி வந்திருக்கிறது; இன்றளவும் விழிப்போடிருந்து வருகிறது.

இப்போது, இன்னொரு வகையான முயற்சி நடைபெற்று வருகிறது. இலக்கியங்கள் சிலவற்றில் 'இடைச்செருகல்' ஏற்பட்டுள்ளனவென்று, இலக்கியங்களையும், இலக்கணங்களையும் நன்கு படித்துத் தேர்ந்த அறிஞர்கள் கூறுகின்றார்களல்லவா? இதைப் பார்த்த மேற்படி தோழர்கள், 'இடைச் செருகல்' என்ற தொடரை மனமபோல் பயன்படுத்தி, தங்களுக்குத் தெரியாதது—தங்களால் புரிந்துகொள்ள முடியாதது—ஆகியவற்றையெல்லாம் 'இடைச் செருகல்' என்று கூறத் துணிந்துவிட்டனர்.

பூதான இயக்கம் குறித்துச் சென்னைவந்திருக்கும் விநோபா பாவே என்பார், தாம் மேற்கொண்ட முயற்சியை வெற்றியுடன் நடததும் வேலையை விட்டுவிட்டு, திருக்குறளில் 'இடைச் செருகல்' இருப்பதைக் கண்டுபிடித்து விட்டதாகக் கூறுகிறார்.

தமிழகததில் சுற்றுப்பிரயாணம செய்து தமிழர்கள் மனததைக் கவரவேண்டுமானால், தமிழ் மொழியில் பேசவேண்டும—தமிழ்ப் பெரியார்களின செய்யுள்களைப் பேச்சினூடே எடுத்துக்காட்டவேண்டும என்பதை விநோபாபாவே நன்கு தெரிந்து கொண்டிருக்கிறார் என்பதை, அவர், பாரதியார் பாடல், இராமலிங்க அடிகள் பாடல், திருக்குறள் முதலியவற்றில் ஒவ்வொரு பாட்டை எடுத்துக்காட்டிப் பேசியிருப்பதிலிருந்து தெரிகிறதல்லவா? மேலும, விநோபா பாவேயின் நிகழ்ச்சி முறைகளை வழக்கம போல் இந்தியில் அறிவிக்க முயன்றபோது, 'இந்தி தேவையில்லை; தமிழிலேயே அறிவிக்கலாம' என்று அவர் கூறியதும் இதை ஊர்ஜிதப்படுத்துகிறதல்லவா?

இவ்வாறு தமிழ் பேசித் தமிழ்ப் பாக்களைப் பாடிக் காட்டித் தமிழர் மனத்தைக் கவரும் நோக்கங்கொண்ட விநோபா பாவே, திருக்குறளைப் பற்றிப் பேச முனைந்து,

"திருவள்ளுவர் அறத்துப்பால், பொருட்பால் ஆகிய முதல் இரு பால்களை மட்டுமே, எழுதியிருக்கலாம்; மூன்றாவது பகுதியான காமத்துப்பாலை வள்ளுவர் பின்னர் ஒரு கட்டததில் எழுதியிருக்கலாம்—அல்லது, பினபு வேறு எவராவது எழுதியிருக்கலாம்,"

என்று, கூறியுள்ளார். திருவள்ளுவர் இரண்டே பால்கள் எழுதினர் என்பதற்கு அவர் காட்டும ஆதாரம், அந்த இரு பால்களும் 108 அதிகாரங்களை கொண்டவை என்பதும், இந்த எண்ணிக்கை இந்துக்களால் புனிதமாகக் கொண்டாடப்படுவதாகும என்பதுமேயாகும்.

விநோபாபாவே, இவ்வாறு தாம் அறியாத வேலைகளில் ஈடுபட்டுத் தமிழர்களின் வெறுப்பைத் தேடிக்கொள்வதில் ஈடுபடுவானேன்? வேலூர் சிறையில் சில நாட்கள் தமிழைப் படித்துவிடுவதால் திருக்குறளின காமததுப்பால் வளளுவர் எழுதியதா? அல்லவா?—எனபதைக கண்டுபிடிததுவிட முடியும என்று அவர் எண்ணிக கொண்டிருந்தால் அவர் நிலை கண்டு இரஙகுகிறோம்.

திருககுறள ஏன முப்பாலாக இருக்கின்றது? அதன் உட்கிடககை என்ன? காமத்துப் பாலில் வள்ளுவர் என்ன கூறுகிறார்? திருவள்ளுவருககும — இந்து மதததற்கும என்ன தொடர்புளது? — என்பவற்றையெல்லாம அறிந்துகொள்ள முடியாதிருக்கும் நிலையில், அறியா மககள் எவரேனும் ஏதேனும உளறிக் கொட்டியிருந்தால், அவறறைக் கேட்டுக்கொண்டு, தமிழ் மக்களின் மிக உயர்நத இலக்கிய-நன்னெறி நூலாகிய திருக்குறளையும், அதனை, இயறறித் தமிழகத்திற்கு வான்புகழ் தேடித்தந்த திருவளளுவரையும குறைததுப் பேசும இழிதகைமையை விநோபா பாவே மேறகொள்ளாமலிருந்திருக்கலாம.

இனியேனும, இவ்வாறுன, ஆழம தெரியாமல் காலைவிடுத் தொல்லைப்படும செயலை விநோபாபாவே செய்யாமலிருப்பார் என்று நமபுகிறோம்.

அம்பர் நூற்பு இயந்திரம் பயன்படுமா?

ஆளுவோர் முயற்சி ஆட்டங்கண்டுவிட்டது

புதுடில்லி, மே. 19—

அம்பர் நூற்பு இயந்திரத்தைப் பயன்படுத்துவது பற்றிய ஆளுவோர் முடிவு வெளிவரக் காலதாமதம் ஆகும் எனத் தெரிகிறது. இதுபற்றி ஆராய்ந்து மே மாதம் முடிவுக்குள் கருத்துத் தெரிவிக்குமாறு நியமிக்கப்பட்ட அதிகாரம் பெற்ற குழுவினர், இன்னும் ஒரு முடிவுக்கு வரவில்லையாதலின் இம்மாத முடிவிற்குள் அவர்கள் தம் கருத்தைத் தெரிவிக்க முடியாத நிலையில் உள்ளனர். இந்நூற்பு இயந்திரத்தைப் பயன்படுத்திப் பார்த்து நன்மை தீமைகளை அறிவிக்குமாறு இந்தக் குழுவினர் கதர் போர்டுக்குக் கட்டளையிட்டிருந்தனர். அந்த போர்டினரோ பல்வேறு பகுதிகளிலிருந்து அறிக்கையை எதிர்பார்த்துக்கொண்டிருக்கிறார்கள்.

அம்பர் நூற்பு இயந்திரங்களைப் பெருவாரியாகப் பரப்பிவிட்டால், அவற்றால் உற்பத்தி செய்யப்படும் நூலைப் பயன்படுத்துவது எவர்? கைத்தறி நெசவாளர் ஆலை நூலையே விரும்புகின்றனர். அந்த நூலைக் கொண்டுதான் அழகிய பூவேலைப்பாடுகளுடன் கூடிய துணிகளை செய்ய முடிகிறதே யொழிய, நூற்பு இயந்திர நூலைக் கொண்டு ஒன்றும் செய்ய முடியாதென்று அவர்கள் கூறுகின்றனர்.

தேசிய உணர்வை பூட்டுவதற்காகக் கையால் நூற்கப்படும் நூலின் அளவை அதிகப்படுத்த வேண்டுமென்பது ஆளவந்தாரின் ஆசை. ஆனால், கைத்தறிக்காரர்களின் போக்கு ஆளவந்தாரின் ஆசையில் மண்ணைப் போடுவதாக இருக்கிறது.

அரசாங்கத்தின் போக்கைக் கவனித்தால், காங்கிரசிடம் விசுவாசம் காட்டுவதற்காகவே, இந்த கை நூற்பு நூலை அரசாங்கம் அதிகப் படுத்துகிறதா? அல்லது வேலையில்லாத பெரும்பாலோருக்கு வேலை கொடுப்பதற்காக இம் முயற்சி எடுத்துக் கொண்டிருக்கிறதா? வேலை தருவதற்காகவென்றால், நன்றாகச் சிந்தித்து, ஆராய்ந்தால் இதைவிடக் குறைந்தபணச் செலவில் நல்ல முறையில் பலருக்கு வேலை கிடைக்குமாறு செய்யலாமே!

மே 24-ல் மாமிச உணவு கிடையாது!

சென்னை, மே 18—

இம்மாதம் 24-ந் தேதியன்று புத்தரின் 2500-வது ஆண்டு பிறந்த விழாவையொட்டி விடுமுறை விடப்படும் என்று இந்திய அரசாங்கம் அறிவித்துள்ளது.

அன்று விழாவின் அறிகுறியாக ஆடு மாடுகள் வெட்டப்பட மாட்டா என்று தெரிகின்றது. சென்னை நகரசபைக் கமிஷனர்

(4-ம் பக்கம் பார்க்க)

எம். எல். ஏ.-க்களுக்கு இலவச ரயில் பிரயாணம்!

ஆனால் அரசாங்கமே கட்டணத்தை செலுத்தவேண்டும்

புதுடில்லி, மே 18—

உத்திரப் பிரதேசம், அசாம் ஆகியவற்றின் அரசாங்கங்கள் மத்திய அரசாங்கத்தை, மாகாணச் சட்டசபை உறுப்பினர்கள் தத்தமது மாநிலங்களில் இலவசமாக இரயிலில் பிரயாணம் செய்வதற்கு அனுமதி கோரியிருந்தன.

மக்கள் சபையில அதையொட்டி கேட்கப்பட்ட ஒரு கேள்விக்கு இரயில்வே துணை மந்திரி பதிலளிக்கையில், இப்படிப்பட்ட ஏற்பாடுகள் செய்துகொள்வதில் மத்திய அரசாங்கத்திற்கு ஆட்சேபணை கிடையாதெனறும், சட்டசபை உறுப்பினர்கள் தத்தமது மாநிலங்களுக்குட்பட்ட பகுதிகளில் இலவசமாக இரயில் பிரயாணம் செய்யலாமெனறும், ஆனால் அந்தந்த மாநில அரசாங்கஙகள் அதற்கான கட்டணத்தை இரயில்வேக்குச் செலுத்திவிட வேண்டுமென்றும் குறிப்பிட்டார்.

இந்தியின் சாயம் வெளுக்கிறது

இலக்கிய இந்திக்கும் — பேசும் இந்திக்கும் தொடர்பில்லையாம்

எர்ணாகுளம், மே 17—

"இந்தி மொழியில் உள்ள இலக்கியங்கள் இந்த நாட்டில் ஒரு முறையாக வளர்ச்சியடைவிலலை. இலக்கியத்தில் எழுதப்பட்டிருக்கும இந்திக்கும், நாட்டின் பல்வேறு பகுதிகளிலும் பல்வேறு வகையில பேசப்படும் இந்திக்கும் தொடர்பு இல்லை,"

என்று, 'கேரள சாகித்திய பரீஷத்'தால் நடத்தப்பட்ட பாரதிய சாகித்திய சம்மேளனததின் இரண்டாவது நாள் கூட்டத்தில் புதுடில்லியில் உள்ள சாகித்திய அகாடமியின உதவிச் செயலாளா திரு. பிரபாகர் மாச்சிவ் எனபவர் கூறினார்.

வட இந்தியாவில் 17 கோடி மக்கள் இந்தி பேசுகின்றவர்களாயிருப்பினும், இலக்கிய இந்திக்கும்-பேச்சு வழக்கிலுள்ள இந்திககும் பெருத்த வேறுபாடுள்ளது என்பதை அவர் விளக்கினார்.

நீராழி மண்டபம் போன்ற அணு உலை

இன்னும் இரு திங்களில் வேலை துவங்குமாம்

புதுடில்லி, மே 17—

பம்பாயில் நீராழி மணடபம் போனறு கட்டப்படுள்ள அணு உலை, இன்னும் 6 அல்லது 8-வாரஙகளுககுளளாக வேலை செய்யத் துவஙகுமெனவும், கனடிய அரசினரின உதவியால் நிறுவப்படும் அணு உலை இன்னும் இரண்டாணடுகளில நாமாணிக்கப்படுமெனவும் மககட் சபையில் பிரதமர் நேரு தெரிவித்திருக்கிறாராம.

இந்தியப் பேரரசின் குடியிருப்புத் திட்டம்

பல்கலைக் கழக ஊழியர்களுக்கு விரிவுபடுததப்பட இயலாதாம்

சென்னை, மே 17—

இந்தியப் பேரரசின் குறைந்த வருமானக்காரா குடியிருபபுத திட்டதனை பல்கலைக கழக ஊழியர்களுககு விரிவுபடுத்த முடியாதெனை மததிய அரசினா தெரிவித்துள்ளனராம். இது, பல்கலைக் கழக மானியக் குழு கவனிக்க வேண்டிய பிரச்சினையென்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

உணவு உற்பத்தித் தொழிற்சாலை

மைசூரில் நிறுவப்படும்

சென்னை, மே 17—

நாள்தோறும், புரோட்டீன் சத்து மிகுந்ததும், ஆனால் விலை குறைந்ததுமான 5,000 டன் உணவு உற்பத்தி செய்யும் தொழிற்சாலை ஒனறு விரைவில் மைசூரில் அமைக்கப்படும்.

மத்திய அரசாங்கமும், கோடிக் கணககானவாகளுக்கு உணவு கொடுக்கும் சங்கததின் இந்தியக் கிளையும் சேர்ந்து இம்முடிவுக்கு வந்துள்ளது.

நாகையில் அண்ணா

6—5—56 காலை 9 மணிக்கு நாகை வட்டம் வெங்கிடங்கால் தி. மு. கழகக் கட்டிட நிதிக்காக நாகை ஸ்டார் டாக்கீசில் திருவாரூர் கருணை எம். ஜமால் தலைமையில் சிறப்புக் கூட்டம் நடைபெற்றது. 'திராவிடத்தின் உலகத் தொடர்புகள்' குறித்து தோழர் சி. ஜம்புவும், 'தற்கால அரசியல் நிலை' குறித்து தோழர் அரங்கண்ணல் அவர்களும் பேசினர்.

பின்னர், அண்ணா அவர்கள், சமுதாய சீர்திருத்தம் குறித்து விரிவுரையாற்றினர். நுழைவுக் கட்டணம் மூலம் கூட்டத்தில் ரூ. 1,500 வசூலானது குறித்துப் பாராட்டியும், சிறப்புக் கூட்டங்களின் அவசியம் குறித்தும் அண்ணா அவர்கள் தமது விரிவுரையில் குறிப்பிட்டார்.

தோழர் அ. சந்தானம் நன்றி நவின்றார்.

புதிய கர்னாடகத்திற்கு சென்னைச் சொத்திலும் பங்குவேண்டுமாம்!

இல்லையேல், கர்னாடகம் கடன்கார மாநிலமாகிவிடுமாம்!

பொருளாதார வளர்ச்சியில் பின்தங்கிய பகுதியாதலால் 38 கோடி ரூபாய் கடன் ஏற்படுமாம்!

ஹூப்ளி, மே 18—

புதிதாக அமையப்படவிருக்கும் கர்னாடக மாநிலத்திற்கு, சென்னை, ஐதராபாத், பம்பாய் ஆகிய மாநிலங்களின் சொத்துக்களில் பங்கு வேண்டும் என்றும், பங்கு கிடைக்க வில்லையானல் புதிய கர்னாடக மாநிலம் கடன்கார மாநிலமாக இருக்கவேண்டி வருமென்றும் இன்று பம்பாய் சட்டசபை உதவி சபாநாயகர் திரு. எஸ். ஆர். காந்தி பத்திரிகை நிருபர்களிடம் கூறியுள்ளார்.

இப்போது பம்பாய் மாநிலத்தோடு இணைந்திருக்கும் சில பகுதிகளும், சென்னையில் இணைந்திருக்கும் சில பகுதிகளும், ஐதராபாத்தில் இணைந்திருக்கும் சில பகுதிகளும் புதிய கர்னாடகத்தில் இணைக்கப்படும் என்றும், அவைகள் யாவும் மிகவும் பொருளாதார வளர்ச்சியில் பின்தங்கிய பகுதிகள் என்றும், மேற்குறிப்பிட்ட மாநிலங்களின் சொத்துக்களிலும் பங்கு பெறுமல் மேற்குறிப்பிட்ட பகுதிகளை மாத்திரம் இணைத்துக்கொள்வதால் புதிய கர்னாடகத்திற்குச் சுமார் 38 கோடி ரூபாய் கடன் ஏற்படுமென்றும் அவர் குறிப்பிட்டார்.

செய்திச் சுருள்

★

அச்சிறுப்பாக்கம் மாணவர் விடுதி

மாணவர் சேர்தல்

ஆரம்பக் கல்வி கற்று, உயர்தரக் கல்வி கற்க விரும்பும் அரிசனச் சிறுவர்களுக்கும், பிற்பட்ட வகுப்பு மாணவர்களுக்கும் மாணவர் விடுதி 6—8—1952 முதல் சிறந்த முறையில் நடந்துவருகின்றது. விடுதியில் சேரும் மாணவர்கள், விடுதியில் 'விண்ணப்பப் பாரம்' பெற்று, இரண்டணு தபால் தலையுடன் 10—6—56 தேதிக்குள் கீழ்கண்ட முகவரிக்கு விண்ணப்பித்துக் கொள்ள வேண்டும். கமிட்டி பரிசீலனைக்குப் பின் விவரம் தெரிவிக்கப்படும்.

முகவரி :—திருமதி சுவாமி ஜெகதாம்பாள். செயலாளர்-மானேஜர் அச்சிறுப்பாக்கம்.

முத்தமிழ் ஆண்டு விழா

ஒக்கரை திருவள்ளுவர் படிப்பகத்தின் 2-வது முத்தமிழ் ஆண்டு விழா 13—5—56 இரவு 7-மணிக்கு, புலவர் இலக்குமணன் தலைமையில் நடைபெற்றது.

இயல் தமிழ், இசைத் தமிழ், நாடகத் தமிழ் என்பதுபற்றி முறையே திருவாளர்கள் இரா. பெருமாள், மு. சி. வெங்கடாசலம், சு. செல்லப்பன் பேசினர்.

இரவு 11 மணிக்கு 'இளங்கோ' மன்றத்தாரால் 'தூக்கு மேடை' நாடகம் நடைபெற்றது.

கரூர் இலட்சிய நாடக மன்றம்

13-5-56-ல், மேற்படி மன்றக் கூட்டம், தோழர் எம். கே. கரிகாலன், தலைமையில் நடைபெற்ற போது, மன்ற நிர்வாகிகள் தேர்ந்தெடுக்கப்பெற்றனர் :— செயலாளர் : வி. கே. பச்சை; துணைச் செயலாளர் : என். எஸ். செல்வராஜ் ; பொருளாளர் : ஜலாம் ; நாடகப் பயிற்சியாளர்—மன்றப் பொருப்பாளர் : அன்பரசு

தோழர்கள் முயற்சி

சென்னை — கொருக்குபேட்டை வியாசர்பாடி, கரிமேடு பகுதிகளில் ஏற்பட்ட தீ விபத்தினுல் பாதிக்கப்பட்ட சுமார் 80 குடும்பங்களுக்கு நிவாரணம் அளிக்கும் பொருட்டு, சென்னை-வண்ணையம்பதி 5-வது வட்ட திருவள்ளுவர் முன்னணிக் கழகத் தோழர்களும், 4-வது வட்ட இளங்கோ கலை மன்றத் தோழர்களும் சேர்ந்து 6-5-56 பிற்பகல் 2 மணியளவில் வட சென்னை மக்களிடையே நிவாரண நிதியாக சேகரித்தவைகளைக் கொண்டு, 7—5—56 பகல் 1-மணிக்கு பாதிக்கப்பட்ட சுமார் 500-க்கு மேற்பட்ட மக்களுக்கு உணவு அளிக்கப்பட்டது

திருக்குறள் மாநாடு

சூலூரில் நடைபெற்ற விவரம்

12—5—56 காலை 10-30 மணியளவில், சூலூரில் திருக்குறள் மாநாடு நடைபெற்றது திரு. எஸ் என். அற்புதசாமி, வரவேற்புரையாற்றினர். திரு. டி. எம். பாஸ்கரத் தொண்டைமான் மாநாட்டைத் திறந்துவைத்துப் பேசினர். திரு. அ. சேனுபதிக் கவுண்டர் எம். எல். ஏ. தலைமையுரையாற்றினர். பின்னர், திருவாளர்கள் செ. நா. சின்னுச்சாமி, எஸ். வி. லட்சுமணன், புலவர் மருதவாணர், பேராசிரியர் இலக்குவனர் ஆகியோர் சிறப்புரையாற்றினர்.

பிற்பகல் நிகழ்ச்சியில், திரு. ஏ கே. வில்வம், புலவர் சுந்தரராசனர், திருமதி அருண்மொழி சொற்பொழிவாற்றினர்.

பின்னர், இசை முரசு நாகூர் அனீபா, தம் குழுவினருடன் இசைவிருந்து நல்கினர்.

பின்னர், மாநாட்டில், கல்விக் கூடங்களிலும், கல்லூரிகளிலும் பாடத் திட்டங்களில் திருக்குறளுக்கு, முதன்மையளித்து, வகுப்புகளுக்கேற்ப திருக்குறட் பாக்களைப் படிப்படியாக மிகுதிப்படுத்திக் கற்பிக்கவும், திருக்குறளுக்கெனத் தனி விளுத்தாள் ஏற்படுத்தவும் கல்வித் துறைத் தலைவர், பல்கலைக் கழகத்தாரைக் கோரியும், திருச்சி வானொலி நிலையத்தார் ஒவ்வொரு நாளும் நிகழ்ச்சியைத் தொடங்குவதற்கு முன்பு திருக்குறட் பாக்களை இசையாகப் பாடவும், அவற்றின் விளக்கவுரை கூறவும் ஏற்பாடு செய்யக் கேட்டுக்கொண்டும், சென்னை நாட்டைத் 'தமிழ் நாடு' என்று அழைக்க ஆவன செய்யுமாறு, சென்னை அமைச்சர் குழுவை வற்புறுத்தியும் தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டன.

இராயபுரம் இலக்கிய மன்றம்

13—5—56 காலை 10 மணியளவில், மேற்படி மன்றச் சார்பில், பனைமரத்தொட்டிசிவசுப்பிரமண்ய சுவாமி கோவில் மண்டபத்தில் ஓர் இலக்கியச் சொற்பொழிவுக் கூட்டம் தோழர் கு. பெ. துரைசாமி தலைமையில் நடைபெற்றது. தோழர்கள் ம. பொ. கேசவராமன், ம. செல்வராசன், தயாநிதி, நா. சண்முகனர் ஆகியோர் பல தலைப்புகளில் பேசினர்.

'பகுத்தறிவுப் பாசறை' துவக்க விழா

6—5—56 மாலை 6 மணிக்கு, சென்னை - மவுண்ட் ரோடு, இம்பீரியல் பாங்கி சந்தில் தோழர் ஜே. பார்த்தசாரதி தலைமையில் 'பகுத்தறிவுப் பாசறை' துவக்க விழா நடைபெற்றது. தோழர் இளம்பரிதி பாசறையைத் திறந்து வைத்தார். தோழர்கள் வே. கரிகாலன், மா. சே. த. மூர்த்தி, அரங்கசாமி, சே. மு. காதர், நீல. நாராயணன், ட. கோபால், ஆர். டி. அரசு ஆகியோர் பாசறையின் நோக்கம், ஆக்கவேலை ஆகியவை பற்றிப் பேசினர்.

நிஜாமின் வாரிசுதாரர் அவர் பேரப்பிள்ளையே

'மூத்தமகனுக்குக் கடன் கொடுக்காதே' என எச்சரிக்கை

ஐதராபாத், மே 18—

ஐதராபாத் இராஜ பிரமுகரான நிஜாம் அவர்கள், தமது பேரப்பிள்ளையாகிய இளவரசர் முக்கரம்ஜா என்பவரைத் தமது வாரிசுதாரராக நியமித்துள்ளதாகவும், அவரது மூத்தபிள்ளையாகிய பீரார் இளவரசர் வாரிசு தாரராக மாட்டார் என்பதாகவும் அதிகார பூர்வமாகச் செய்தி வந்துள்ளதாகத் தெரிகிறது.

நிஜாம் தனது கையொப்பமிட்ட ஒரு செய்தியின் வாயிலாகப் பொதுமக்கள், பீரார் இளவரசர் தமது வாரிசுதாரர் ஆவர் என்ற நம்பிக்கையின் மீது அவருக்குக் கடன் கொடுக்கக் கூடாதென்று எச்சரித்துள்ளார்.

அவரோ, அவரது வாரிசு தாரரோ பீரார் இளவரசரின் கடனை அடைக்க மாட்டார்கள் என்றும் அறிவிக்கப்பட்டுள்ளது.

சென்னைக்கு அடுத்த கவர்னர் யார்?

சென்னை, மே 18—

இப்போது சென்னைக் கவர்னராகவுள்ள பிரகாசா அவர்களின் பதவிக் காலம் அடுத்த ஆண்டு ஏப்ரல் மாதத்தோடு முடிவடைந்தவுடன் நவநகர் இராஜப்பிரமுகர் ஜாம் சாகிப் அடுத்த கவர்னராக நியமிக்கப்படலாம் என்ற பேச்சு அடிபடுவதை வாசகர்கள் அறிந்திருப்பர்.

இப்போது, மேலும் சிலருடைய பெயர்களும் அடிபடுகின்றன ; குறிப்பாக இப்போது பீகார் கவர்னராயிருக்கும் ஆர். ஆர். திவாகர் அடுத்த கவர்னராக நியமிக்கப்படலாம் என்றும் வதந்தி உலவுகிறது.

இந்தியாவுக்கு பர்மா அரிசி

கல்கத்தா, மே 17—

இவ்வாரம் புதுடில்லியில் கையொப்பமிடப்பட்ட இந்தியா—பர்மா அரிசி ஒப்பந்தப்படி பர்மா 3 ஆண்டுக்காலத்திற்கு ஆண்டுதோறும் 40,000 டன் அரிசி இந்தியாவிற்குக் கொடுக்குமாம்!

அடுத்த மாதத்தில் முதல் தவணையாக அரிசி அனுப்பப்படுமாம்!

'சவ' மொழிக்குச் 'சீர்' செய்யப்படுமாம்

புதுடில்லி, மே 18—

பல்கலைக் கழகங்களிலும், மற்ற கல்வி நிலையங்களிலும் சமஸ்கிருதக் கல்விக்குச் செய்யப்பட்டுள்ள வசதிகளைப் பரிசீலனை செய்து, சமஸ்கிருதக் கல்வி வளர்ச்சிக்கு ஆவன செய்வதற்கென ஒரு சமஸ்கிருதக் குழு நியமிக்கப்படுமாம். அது சம்பந்தமாக மத்திய சட்டசபையின் அங்கீகாரத்தை எதிர் நோக்கிக் கொண்டிருக்கிறார்களாம்.

இத்தகவலை, மாநிலங்கள் சபையில் துணைக் கல்வி மந்திரி அறிவித்தார்.

அரசாங்க ஊழியர்களுக்குக் கடன்தர ஏற்பாடு

நாகபுரி, மே 18—

உணவுப் பொருள்களின் விலைவாசிகள் உயர்ந்துவிட்டிருக்கிறபடியால், மத்தியப் பிரதேச அரசாங்கம் மாதம் ரூ. 200-ம், அதற்குக் கீழும் சம்பளம் வாங்கும் அரசாங்க ஊழியர்களுக்கு, இரண்டு மாதச் சம்பளத் தொகையை வட்டியில்லாக் கடனுகக் கொடுத்துதவ ஏற்பாடு செய்திருக்கிறது. இந்தக் கடனைச் சிறு தவணைகளில் அரசாங்கம் பெற்றுக்கொள்ளும்.

கழகச் செய்திகள்

★

வேலூர் (சேலம்) தி. மு. கழகம்

11-5-56 இரவு 7-30 மணிக்கு, தோழர் எஸ். முத்து இல்லத்தில் வி. ஏ. இராமநாதன் தலைமையில் நடைபெற்ற கழகப் பொது உறுப்பினர்கூட்டத்தில் பிப்.20-ல் நடைபெற்ற அர்த்தால் சம்பந்தப்பட்ட வழக்கில், 8-5-56-லிருந்து 11-5-56-ந் தேதிவரை நான்கு நாட்கள் சிறை சென்று மீண்ட தோழர்களான வி. ஏ. இராமநாதன், ஆர். இரத்தினசபாபதி, எம் கருப்பண்ணன், என். கணேசன், பி. முஸ்தபா, என். சையத்மீர், ஏ. மாரியப்பன், ஆர். பழனியப்பன், கே. பொன்னுசாமி, எஸ். பி. கருணாகரன் ஆகியோருக்குப் பாராட்டுதல் தெரிவித்துக்கொள்ளப்பட்டது.

இடையகோட்டை தி. மு. கழகம்

9—5—56 மாலை, கழகப் பணிமனையில், தோழர் மு. அனீபா தலைமையில், கழகச் செயற்குழுக் கூட்டம் நடைபெற்றபோது, கழக ஆக்க வேலைகள் குறித்துத் தோழர்கள் ப. குப்புச்சாமி, அம்மையப்பன், மு. பன்னீர்ச்செல்வன் ஆகியோர் பேசினர். பின்னர், கழக இரண்டாம் ஆண்டு விழாவை முத்தமிழ் திருவிழாவாக நடத்துவதென முடிவு செய்யப்பட்டது.

அனவரதநல்லூரில் தி. மு. க. பொதுக்கூட்டம்

5—5—56ல், அனவரதநல்லூர் தி. மு. கழகத் துவக்க விழாப் பொதுக்கூட்டம், திருவள்ளுவர் திடலில், தோழர் பி. பொருனைமீனன் தலைமையில் நடைபெற்றது. தோழர் வண்ணமுத்து இயக்கப் பாடல்கள் பாடினர். தோழர் பாகுதாசன் பேசியபின், தோழர் நாஞ்சில் கி. மனோகரன் பேசினர் ; அவருக்கு பல அமைப்புகளின் சார்பில் மலர் மாலைகள் அணிவிக்கப்பட்டன. தோழர் அப்பாதுரை நன்றி நவின்றார்.

செம்பனார்கோயிலில் தி. மு. க. பொதுக்கூட்டம்

29—4—56ல், செம்பனார் கோயில் தி. மு. கழகச் சார்பில், திலகர் திடலில், தோழர் சி. ஜம்பு தலைமையில் நடைபெற்ற பொதுக் கூட்டத்தில் தோழர்கள் பி. எஸ். கணேசன், என். சிட்டப்பா, மு. கருணா[illegible] ஆகியோர் தற்கால அர[illegible] நிலை குறித்தும், மாநில வாரம் பற்றியும் பேசினர்.

க. அன்பழகன்

சுற்றுப்பயண நிகழ்ச்சிகள்

திருநாகேசுவரம் :

திருநாகேசுவரம் திருவள்ளுவர் கழகத்தின் ஆண்டு விழா, 10-5-56 மாலை தோழர் அன்பு கணபதி தலைமையில் நடைபெற்றது. தோழர் சம்புலிங்கம் பேசியபின்னர், தோழர் க. அன்பழகன் வள்ளுவர் வழியே திராவிடப் பண்பாட்டின் அடிப்படை என்பதை சுட்டிக்காட்டி, வள்ளுவர் வாழ்ந்த நாட்டில்தான் இன்று மூட நம்பிக்கை வாழ்ந்து வருகிறது—'வள்ளுவம்' நாடெங்கும் பரவுதல் வேண்டுமெனின் மூட நம்பிக்கைகள் முறியடிக்கப்பட வேண்டுமென்று கூறினர்.

திருப்பாலக்குடி

தஞ்சை மாவட்ட திருப்பாலக்குடியில் வ. உ. சி படிப்பக ஆண்டு விழா தோழர், சி. பாலசுப்பிரமணியம் தலைமையில் 11-5-56 மாலை 6-30 மணி அளவில் நிகழ்ந்தது. தோழர் அ. சதாசிவம் வரவேற்புரை நிகழ்த்தினர். தோழர் க. சிதம்பரம் ஆண்டறிக்கை படித்தார். பின்னர், தோழர் அறிவுடை நம்பி அவர்கள், வ. உ. சி.-யின் வாழ்க்கை வரலாற்றை ஒட்டிப் பேசுகையில் வ. உ. சி.-யின் வாழ்க்கை மூடத்தனத்தின் மூடைநாற்றத்தை ஒழிப்பதாக-பகுத்தறிவை வளர்ப்பதாக—தமிழிற்குத் தொண்டு செய்வதாக நாட்டு விடுதலைக்கு உழைப்பதாக-அமைந்தது என்பதைக் குறிப்பிட்டு பேசினர்.

இறுதியில், தோழர் க. அன்பழகன் வ. உ. சி.-யின் வாழ்க்கையின் சிறப்பும், அவர் செய்த தொண்டும்' சுயமரியாதை இயக்கத்தின் அடிப்படையாக விளங்கியதை விளக்கினர்.

மன்னார்குடி :

12-5-56 இரவு 7 மணியளவில், மன்னார்குடி—தேரடியில், தோழர் ப. நாராயணசாமி தலைமையில் தி. மு. கழகப் பொதுக்கூட்டம் நடைபெற்றது.

தலைவரின் உரைக்குப் பின்னர், தோழர் அறிவுடை நம்பி தி. மு. கழகத்தின் இலட்சியம் குறித்து விளக்கினர். தோழர் க. அன்பழகன் எம். ஏ. அவர்கள் பேசுகையில் திருச்சி மாநில மாநாட்டின் சிறப்புப் பற்றி விளக்கினர்.

குடந்தை :

18-5-56 6-30 மணியளவில், குடந்தை தி. மு. கழக மாணவர் கிளைக்கூட்டம் தோழர் அப்பாவு தலைமையில், நடைபெற்றது. தோழர்கள் இராதா மணியரசு சிறிது நேரம் பேசியபின் தோழர் அறிவுடைநம்பி 'திராவிட நாடு பிரியவேண்டிய அவசியத்தையும், தி. மு. கழகம் இதுவரை ஆற்றிவந்திருக்கிறத் தொண்டின் சிறப்பையும் சுட்டிக்காட்டி, இரண்டாம் ஐந்தாண்டுத் திட்டத்திலும் தென்னாடு புறக்கணிக்கப்பட்டிருப்பதையும் விளக்கிப் பேசினர். பின்னர் தோழர் க. அன்பழகன் இன்றைய ஆட்சியாளரின் போக்குக் குறித்து பேசினர்.

திருமணம்

13-5-56 காலை 9 மணியளவில் இராயபுரம், சிமெட்ரி ரோட், 7-ம் எண் இல்லத்தில் தோழர் நீலகண்டன்—தோழியர் வேலம்மாள் திருமணம் புலவர் சி. தியாகராசன் தலைமையில் நடைபெற்றது. தோழர்கள் எஸ். எஸ். தென்னரசு எஸ். பி. முத்துராமன் ஆகியோர் வாழ்த்துரை வழங்கினர்.

மணமக்களின் சார்பில் 'நம் நாடு' வளர்ச்சிக்காக ரூ. 1 அன்பளிக்கப் பட்டது. வரபெற்றோம்-நன்றி-பொறுப்பாளர்.

* * *

மதுரை, குரப்பாளையம் தோழர் சண்முகசுந்தரம் அவர்களின் திருமண நினைவாக 'நம் நாடு' வளர்ச்சிக்கு அன்பளிப்பாகத் தரப்பட்ட ரூ. 2-ம் வரப்பெற்றோம்—நன்றி—பொறுப்பாளர்.

'ஆட்சியினர் அடக்குமுறை நம்மைப் பலவகையிலும் கொத்தியிருக்கிறது'

'கொடுமை'களை ஏற்றுத் துவளாமல் தலைநிமிர்ந்து வளர்ந்திருக்கிறோம்'

'மக்கள் தீர்ப்புக்கிணங்க தி. மு. க. நடக்கத் தவறாது'

அன்பில் தர்மலிங்கம் வரவேற்புரை

வள்ளுவர் நகர், மே 18—

"............நாம் வாழ ஒரு வழி கண்டாக வேண்டும் ; எத்தனை நாட்களுக்குத்தான் நமது உழைப்பும், முயற்சியும், சக்தியும் மற்றவர் உயரவே பயன்பட வேண்டும்? விழலுக்கிரைத்த நீராகி வீணாக வேண்டும்? அதனால்தான் நாம், இந்த மாநாட்டில் ஒரு முடிவுக்கு வர இருக்கிறோம். சர்வாதிகார முறையை எதிர்த்து ஜனநாயகத்துக்கு மதிப்பளிக்கும் வகையில் தனிக் கழகம் கண்ட நாம், துவக்க கால முதலே நமது ஒவ்வொரு செயலையும் ஜனநாயக முறைக்கு இம்மியும் வழுவாது செய்துவருகிறோம். அந்த அடிப்படையில் தான், இப்போது இங்கே திரண்டுள்ள இலட்சோபலட்சம் திராவிட நாட்டுப் பெருங்குடி மக்களின் கருத்தை அறிய ஒரு வாக்கெடுப்பு முறையை வைத்திருக்கிறோம்.

"நாடு இன்றுள்ள நிலையில், காங்கிரசின் சர்வாதிகாரப் போக்கைக் கண்டித்துத் தேர்தலில் போட்டியிட சரியான எதிர்க் கட்சிகள் இல்லை. திராவிட முன்னேற்றக் கழகம்—நாட்டு மக்களிடத்திலே ஏராளமான அளவில் பாசமும், நம்பிக்கையும் பெற்றிருக்கிற ஒரே மாபெரும் கட்சி; இந்தக் கட்சி, வருகின்ற பொதுத் தேர்தலில் காங்கிரசை எதிர்த்துப் போட்டியிட வேண்டுமா? வேண்டாமா?—என்று, மக்கள் தீர்ப்புக் கூறியாக வேண்டும். அதற்கான வாய்ப்பை இந்த மாநில மாநாடு உங்களனைவருக்கும் அளிக்கிறது! பெரும்பான்மையான மக்களின் தீர்ப்புக்கிணங்க தி. மு. கழகம் நடந்துகொள்ளத் தவறாது."

—இவ்வாறு, தி. மு. கழக இரண்டாவது மாநில மாநாட்டு வரவேற்புக் குழுத் தலைவர் அ. பெ. தர்மலிங்கம் அவர்கள், தனது வரவேற்புரையில் குறிப்பிட்டுவிட்டுத் தொடர்ந்து பேசியதாவது :—

" ஏழாண்டு நிரம்பியுள்ள இளங் குழவி போன்ற நமது திராவிட முன்னேற்றக் கழகம், பிறக்கும் போதே, 'அம்மா' என்று அழுது கொண்டே பிறக்கும் குழந்தை போல, கண்ணீர் சிந்திக்கொண்டே பிறந்து—'கண்ணீர்த் துளி'யென்ற காரணப் பெயரையும் பூண்டதாகும். 1949-ம் ஆண்டு செப்டம்பர் மாதம் 17-ம் நாள் தென்னாட்டிலே ஜனநாயகம் முளைவிட்ட நாளாகும்; நாட்டு விடுதலைப் பட்டாளம் அணிவகுத்துத் திரண்ட நாளாகும். அந்நாள், இந்நாட்டு வரலாற்றிலே பொன்னெழுத்துக்களால் பொறிக்கப்பட வேண்டிய சீரிய நாள்—திராவிட முன்னேற்றக் கழகமெனும் களங்கமில்லா முழுமதி தோன்றிய நாள்! ஏறக்குறைய ஏழாண்டுக்கால இடைவெளிக்குள், 'ஏனோ தானோ'க்களாகியநாம்,நமது இலட்சியப் பாதையிலே கடந்துவந்த காட்டாறுகள் எத்தனை? தாண்டிய தீக்குழிகள் எவ்வளவு? சாதித்த அருஞ்செயல்கள் என்ன என்ன?

" தந்தையுடன் வாழ்ந்திருந்த வீட்டை விட்டு, வெறுங் கையுடன் தான் வெளியேறினோம்—வீரத்தையும் விவேகத்தையும், நேர்மையையும் நீதியையும் மனத்திலே ஏந்தி! இன்று நாம் எவ்வளவு சொத்துக்குச் சொந்தக்காரர் தெரியுமா? 40,000 ரூபாயில் வாங்கப்பட்ட 'அறிவகம்', அதிலே கழகத்தின் அதிகாரபூர்வமான ஏடு 'நம் நாடு'; 30,000 ரூபாயில் வாங்கப்பட்ட நுங்கம்பாக்கம் மைதானம்; மற்றும், ஊர்தோறும் கிளைக் கழகங்களுக்குச் சொந்தமான எண்ணற்ற கட்டிடங்கள்; இவை யாவற்றையும்விட மதிப்பில்லா மாணிக்கங்களான மாவீரர் இலட்சக்கணக்கிலே நீங்கள்—நினைததுப் பார்த்தால் நெஞ்சம் பூரிக்கவில்லையா?

"இந்த ஏழாண்டு வாழ்வில் ஆணவக்கார ஆட்சியினரின் அடக்குமுறை தர்பார் எத்தனை முறை நம்மைக் கொத்தியிருக்கிறது? கவர்னர்-ஜெனரலுக்கும், மற்ற மத்திய சர்க்கார் மந்திரிகளுக்கும் கருப்புக்கொடி காட்டித் தடியடியும், சிறைவாசமும் பரிசாகப் பெற்றோம். 'ஆரிய மாயை' வழக்கும், அந்தத் தடையை மீறி வடநாடு மாவட்டம் முழுவதும் போராட்டமும், 'இரணியன்' நாடகத் தடை மீறிய போராட்டமும், அதன் விளைவுகளும் நாடறியாததல்ல! நம்மை நசுக்கிவிட எண்ணி ஏகாதிபத்தியப் பித்தர்கள் வீசிய 144 தடையுத்தரவை மீறிக் குன்றத்தூரில், நாராயணமங்கலத்தில், சித்தையன்கோட்டையில், தென் தாமரைக்குளத்தில் கைது செய்யப்பட்டும், துப்பாக்கிப் பிரயோகத்துக்கு ஆளாகியும் துவளாமல் நிமிர்ந்து, வளர்ந்துதான் வந்திருக்கிறோம்.

" உலகம் பூராவையும் ஒரு கலக்குக் கலக்கிவிட்ட மும்முனைப் போராட்டங்கள் என்ன சாமான்யமா? அகில இந்திய காங்கிரசின் அறுபதாண்டு வரலாற்றிலும் காண முடியாதவாறு ஒரே நாளில் ஐயாயிரம் பேர் சிறைபட்டோமே! அதனால் என்ன குறைபட்டுப் போய்விட்டதா? ஐவர் வழக்கும், தூத்துக்குடி, கல்லக்குடி வழக்குகளும் கழகத்தின் பலத்தைக் குலைத்துவிடவில்லையே!

"நாம் எப்போதும் போராட்டங்களை நாடித் திரிவோரல்ல ; வருகின்ற போராட்டங்களை விடுவோருமல்ல! இடையிலே துவண்டு விடாமல், இறுதிவரையில் போராடியே வெற்றிபெற்றிருக்கிறோம்

" இயக்கத்துக்காக அரும்பாடுபட்டு கொள்கை காக்க உயிர் நீத்த தியாகிகள் ஏராளமானோர் நம் வரலாற்றில் உண்டு. அன்னாரின் குடும்பம் தத்தளிக்கும் நிலைக்குச் செல்லாமல் தடுக்க இயக்கம் தன்னாலியன்ற உதவிகளைச் செய்திருக்கிறது.

"நாம் இப்போது நமது எதிர்காலத்தை நாமாகவே நிர்ணயித்துத் தீரவேண்டிய ஒரு நெருக்கடியான கட்டத்தில் கூடியிருக்கிறோம். துரோகிகளும், காட்டிக் கொடுப்பவர்களும், சிரித்து ஏய்ப்பவர்களும் சேர்ந்த ஒரு ஆட்சியின் கீழ் அகப்பட்டுக்கொண்டுள்ளோம். நமது மீட்சிக்கான வழி வகைகளை ஆராயவேண்டும்; தக்க முடிவெடுத்து அதன் வழி நிற்கவேண்டும்."

நெஞ்சுருக்கும் காட்சிகள்

[1-ம் பக்கத்தின் தொடர்ச்சி]

இளமுருகு - சொற்செல்வி, கே. கோவிந்தசாமி, தணிகாசலம் (ஆமதாபாத்), சி. வி. எம். அண்ணாமலை ஆகியோர், பொதுச்செயலாளர் நெடுஞ்செழியன் அவர்களின் பொதுவாழ்வுச் சிறப்புக் குறித்தும் அவர் ஆற்றியுள்ள அருந்தொண்டு குறித்தும், அவரது நேர்மைத் திறன், நெஞ்சு உறுதி, நெறி பிறழாப் பண்பு முதலியன குறித்தும் விளக்கம் தந்து, அவரைத் தலைமை ஏற்குமாறு கேட்டு, வழி மொழிந்தனர்.

அடுத்து தோழர் ஏ. கோவிந்தசாமி வழிமொழிய எழுந்ததும் பெருமழை பொழியத்துவங்கிற்று. அதனால் பொதுச்செயலாளர் தலைமை ஏற்று, உரை நிகழ்த்தும் முக்கியம் மிக்க மாநாட்டின் நடு நாயகமான நிகழ்ச்சி, மறுநாள் காலைவரை ஒத்திவைக்கப்பட வேண்டியதாயிற்று.

மழை ஓய்ந்ததால், தொல்லை நீங்கிய மக்கள், இரவு 10 மணிக்குப் பின்னர் தோழர் எஸ். எஸ். இராசேந்திரன் குழுவினரின் 'மணி மகுடம்' என்ற நாடகத்தைக் கண்டு களித்தனர்.

19-ந் தேதியன்று, நடைபெற விருந்த பொதுத் தேர்தல் பற்றிய வாக்கெடுப்பு மறுநாளைக்கு ஒத்தி வைக்கப்பட்டது.

அன்று காலை 9-30 மணிக்குச் சரியாக நிகழ்ச்சிகள் துவங்கின.

முதல்நாள் மாலை பெருமழை தந்த தொல்லை இலட்சக் கணக்காக வள்ளுவர் நகரில், குழுமுவதை எந்த வகையாலும் தடைசெய்யவில்லை.

தலைவர் பெயரை வழிமொழியும் நிகழ்ச்சி தொடர்ந்தது. தோழர்கள் எம். எஸ். மணி, (திருச்சி), ஏ. கோவிந்தசாமி எம். எல். ஏ., கே. கே. நீலமேகம், பார்த்தசாரதி (சித்தூர்), டி. கே. பொன்னுவேலு (மாணவர் கழகம்) ஆகியோர் வழி மொழிந்து பேசினர்.

அடுத்து, தோழர் ஈ. வெ. கி சம்பத் அவர்கள், பொதுச்செயலாளரின் அறிவு, ஆற்றல், பொதுப் பணிச் சிறப்பு, நற்குணப் பண்பு முதலியன குறித்து மிகையின்றி எடுத்துரைத்துவிட்டு, மாநாட்டின் முக்கியத்துவத்தை விளக்கி, அந்த முக்கியத்துவம் பெற்ற மாநாட்டிற்கு பொதுச்செயலாளர் நெடுஞ்செழியன் தலைமை ஏற்பதின் சிறப்பைத் தொட்டுக் காட்டி, வழி மொழிந்து பேசினார்.

இறுதியாக அண்ணா அவர்கள், 'தம்பி வா, தலைமை ஏற்க வா! உனது ஆணைக்குக் கீழ்படிந்து நடக்க உறுதி கூறுகிறோம், வா!' என்று கூறி, கூடியிருந்தோரின் நெஞ்சு நெக்குருகச் செய்து, நெடுஞ்செழியன் அவர்களைத் தலைமை ஏற்குமாறு வழி மொழிந்தார்.

அண்ணா அவர்கள் வழி மொழிந்த வாசகங்கள் இலட்சோபலட்சம் மக்களின் இதயத்தில் அழியாதெழுதப்பட்டு விட்டதைத் தெளிவாகக் காணமுடிந்தது.

பின்னர் மாநாட்டுத் தலைவராக ஒருமனதாய்த் தேர்ந்தெடுக்கப்பட்ட பொதுச்செயலாளர் நெடுஞ்செழியன் அவர்களுக்கு, மாவட்டக் கழகங்கள், தனிப்பட்ட மன்றங்கள்—நபர்கள் சார்பாக எண்ணற்ற மலர்மாலைகளும், கைத்தறி ஆடைகளும் அணிவிக்கப்பெற்றன.

ஒவ்வொரு மாவட்டத்தலைவரும், 'நெடுஞ்செழியன் எங்களுக்கே உரியவர்' என்று 'சண்டை'யிட்டுக் கொண்ட காட்சிகள், நினைவில் தங்குபவை! நெஞ்சம் மகிழ்விப்பவையாகும்!

பின்னர் பொதுச்செயலாளரும் மாநாட்டுத் தலைவருமான நெடுஞ்செழியன் அவர்கள், கூட்டியிருந்த இலட்சக்கணக்கான மக்களின் மகிழ்ச்சிப் பேராரவாரத்திற்கிடையே எழுந்து, மேடையில் அமைத்திருந்த சொற்பொழிவுப் பீடத்திற்குச் சென்று—அடக்கம் மிகுந்த—ஆனால், வீரம்பளிச்சிட்ட நடைபோட்டுச் சென்று ஒன்றரை மணி நேரத்திற்கும் அதிகமாக, தாயக மக்களின் நிலை குறித்தும், தாயக விடுதலை குறித்தும, கழக இலட்சியம் குறித்தும், கருத்து மிக்கதோர் பேருரை நிகழ்த்தினார்.

(தொடரும்)

***

திருமண அழைப்பு

★

புரட்சி நடிகர் தோழர் எம். ஜி. இராமச்சந்திரன் அவர்களின் சகோதரர் தோழர் எம். ஜி. சக்கரபாணி அவர்களின் மகள் தோழியர் சத்தியபாமா அவர்கட்கும்—திரு. சங்கரநாராயணன் அவர்களின் மகன் தோழர் ஏ. இராசன் அவர்கட்கும் 23-5-56 மாலை 4-மணியளவில் சென்னை, இராயப்பேட்டை லாயிட்ஸ் ரோடு, 155-வது இல்லத்தில், அண்ணா அவர்கள் தலைமையில் திருமணம் நடைபெறும். பொதுச்செயலாளர் இரா. நெடுஞ்செழியன், கலைவாணர் என். எஸ். கிருஷ்ணன் வாழ்த்துரை வழங்குவர்.

மாலை 6-30 மணிக்கு திருமதி எம். எல். வசந்தகுமாரி குழுவினர் இன்னிசை விருந்து நடைபெறும்.

பின்னர், திடுவாவடுதுறை, நாதசுர இசைப் பெரும் புலவர் இராசரத்தினம் அவர்களின் நாதசுர இசை விருந்து நடைபெறும்.

***

பொதுத் தேர்தலில் போட்டியிட...

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

போட்டியிட வேண்டாம் என்றும் வாக்களித்திருந்தனர்.

முடிவுகளை மாநாட்டுத் தலைவர் இரா. நெடுஞ்செழியன் அவர்கள், அறிவித்தபோது, மக்களின் கையொலி, பந்தலை அதிரச் செய்தது.

மக்களின் மிகப் பெரும்பான்மையான 'வேண்டும்' என்ற முடிவை அடிப்படையாகக் கொண்டு உருவாக்கப்பட்ட மாநாட்டின் இறுதித் தீர்மானமான 'பொதுத் தேர்தல்களில் தி. மு. கழகம் போட்டியிடுவது என்று இந்த மாநில மாநாடு தீர்மானிக்கிறது' என்ற தீர்மானத்தைத் தலைவர் வாசித்தபோது மக்கள் எழுப்பிய கையொலியும், ஆரவாரப் பேரொலியும் அடங்க பத்து நிமிடங்கள் ஆயின. தங்கள் நீண்ட நாளைய ஆவல் — கோரிக்கை பூர்த்தியாவது கண்ட மக்கள், மகிழ்ச்சிப் பெருக்கால், நீண்டநேரம் ஆரவாரம் செய்தது வியப்பிற்குரியதல்ல!

கழகம் இந்த முடிவை மேற்கொண்ட முறை, அரசியல் இயக்கங்கள் மேற்கொள்ளாதது—வரலாற்றில் புதுமையானது—ஜனநாயகத் தத்துவத்திற்கு மேலும் தெளிவு தரும் சீரியதோர் நடைமுறை என்பதை, மாநாட்டிற்கு வந்திருந்த சில மாற்றுக் கட்சித் தோழர்களும் ஒப்பவே செய்தனர்; அதுதான் வியப்பிற்குரியது!

'கழகம் தேர்தலில் ஈடுபடும்' என்ற இந்த முடிவு கேட்ட காங்கிரஸ் வட்டாரம், இடிவிழுந்த நாகம்போல் நடுங்குகிறதாகத் தகவல் கிடைத்திருக்கிறது.

கழகத்தின் இந்த முடிவுதான், கழக 2-வது மாநில மாநாட்டின் சிறப்பான முக்கியத்துவம் மிக்க முடிவுகள் எல்லாவற்றிலும் தலையாய முடிவு என்பதை, முடிவைக் கேட்டபோது கூடியிருந்த மக்களின் மலர்ந்த முகங்கள் தெளிவாகச் சொல்லின.

இந்த முடிவு அறிவிக்கப்பட்டபோதும், அண்ணா அவர்கள் மாநாட்டின் முடிவில் சிறப்புரை ஆற்றுகையில் முடிவு குறித்து விளக்கம் தந்தபோதும், மாநாட்டுப் பந்தலில் குழுமியிருந்த இலட்சக்கணக்கான மக்களின் முகங்கண்டோரே கண் படைத்தோராவர். அத்தனை வர்ணிக்க இயலாத எழில் பெற்றவையாயிருந்தன அந்தக் காட்சிகள்!

மே 24-ல் மாமிச உணவு...

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

திரு. என். சங்கரன் அவர்களின் வேண்டுகோளுக்கிணங்கவே ஆடு மாடுகள் வெட்டுவோர் இம் முடிவுக்கு வந்துள்ளனர்.

சென்னை நகரில் பெரம்பூரிலும், சைதாப்பேட்டையிலும் உள்ள ஆடு மாடுகள் வெட்டும் தொட்டிகளில் மாத்திரம் நாள்தோறும் சராசரியாக 2,500 வெள்ளாடுகளும், செம்மறியாடுகளும், சுமார் 100 மாடுகளும், எருமைகளும் வெட்டப்படுகின்றன என்று தெரிகிறது.

'டில்லி! இந்திய........

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

'இந்நாட்டின் உயர்ந்த பரம்பரைப் புகழையும், கலாச்சாரத்தையும் நிலை நிறுத்துவதில் டில்லி சரியான பாதையில் செல்லவில்லை' என்றும், அவர் குறிப்பிட்டார்.

"டில்லியில் நவநாகரீகம் தாண்டவமாடுகிறது; புது டில்லியின் வீதிகளில் நடப்போர், தாம் பாரிஸ் மாநகரத்தில் நடப்பதாகத் தோன்றும்; டில்லி, இந்தியாவின் உண்மையான கலாசசாரத்தைப் பிரதிபலிக்கும் இடமாகத் திகழ வேண்டும்; ஆனால், அது மற்ற நாடுகளின் கலாச்சாரத்தையும், நாகரீகத்தையும் பிரதிபலிக்கும் இடமாகக் காட்சியளிக்கிறது; இது, இந்தியாவின் நலத்திற்கு ஏற்றதன்று; டில்லியில் வாழ்க்கை இயற்கையோடு ஒன்றியதாகவோ, இந்தியருக்குரியதாகவோ அமைந்ததில்லை; செயற்கை வாழ்க்கையாகவே அமைந்துள்ளது" என்றும் அவர் குறிப்பிட்டார்.

திராவிட முன்னேற்றக் கழகத்துக்காக தோழர் இரா. நெடுஞ்செழியன், எம்.ஏ. அவர்களால் அழகிரி அச்சகத்தில் அச்சிடப்பெற்று, (24 சூரியநாராயண செட்டித் தெரு, இராயபுரம் சென்னை) வெளியிடப்பெறுகிறது. ஆசிரியர்: இரா நெடுஞ்செழியன் எம். ஏ.